**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி அவிநாசி, பல்லடம்(பொறுப்பு) .**

**2023–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 08–ம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைநிலை மனு எண்.45/2020**
**இன்**
**அசல் வழக்கு எண்.240/2010**

செல்வராஜ்

...மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

1.ராமசாமி

2.ஆறுசாமி

3.ராஜாமணி (இறப்பு)

4.செந்தில்குமார்

5.தேவி

6.மாராத்தாள் (இறப்பு)

7.உன்னாத்தாள் ...எதிர்மனுதாரர்கள்/1–7 பிரதிவாதிகள்

8.நவமணி என்கிற வீராத்தாள் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கட்சி சேர்க்க கோரும் நபர்

இம்மனு இறுதியாக 27.06.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.சிவசுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் அவர்களை தோன்றா தரப்பினராக உத்திரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று

இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

தரப்பினர்களை சேர்க்க தாக்கல் செய்துள்ள மனுவில் ஏற்பட்டுள்ள 1229 நாட்கள் காலதாமதத்தை மண்ணித்து மனுவினை ஏற்க வேண்டி காலவரையறை சட்டம் பிரிவு 5 உடன் இணைந்த 151–ன்படி, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், 6ம் பிரதிவாதி கடந்த 27.08.2016 தேதியில் இறந்துவிட்டதாகவும், அவருடைய ஒரே மகள் நவமணியை 8ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு கடுமையான முதுகு வலி இருந்ததால் கேரளாவில் ஆயூர்வேத சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், அதனால் உடனடியாக மனுவினை தாக்கல் செய்யமுடியவில்லை என்றும், வேண்டுமென்றே காலதாமதமாக மனுவை தாக்கல் செய்யவில்லை என்றும், மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 1229 நாட்கள் காலதாமதத்தை மண்ணித்து மனுவினை ஏற்க உத்தரவிடவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3) எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் அவர்களை தோன்றா தரப்பினர்களாக உத்திரவிடப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு கோப்பினை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

4) **<u>பிரச்சனை:</u>** மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய விசயம் ஆகும்.

5) **<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>**

இந்த அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது. அசல் வழக்கானது முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு தற்போது இறுதிநிலை தீர்ப்பாணைக்காக இடை மனு எண்.335/2013 நிலுவையில் உள்ளது. இந்நிலையில் 6ம் பிரதிவாதி கடந்த 27.08.2016 தேதியில் 8வது எதிர்மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி 8வது எதிர்மனுதாரர் இந்த இறுதி நிலை தீர்ப்பாணை மனுவில் அவசிய தரப்பினர் ஆவார். மனுதாரருக்கு கடுமையான முதுகு வலி இருந்ததாலும், கேரளாவில் ஆயூர்வேத கிசிச்சை எடுத்துக்கொண்டதாலும் மனுவை உடனடியாக தாக்கல் செய்யவில்லை என்றும், காலதாமதத்திற்கு காரணம் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்து பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு பாதகம் எதுவும் இல்லை. இந்த இறுதி நிலை தீர்ப்பாணை

மனுவில் 8 வது எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் என்பதால் அவரை இம்மனுவில் தரப்பினராக சேர்த்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறபிக்கவேண்டிய சூழ்நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக** , மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 08.08.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.08.08 20:31:40 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம் (பொறுப்பு)**

<u>**பிற்சேர்க்கை :**</u> **–**இல்லை.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.08.08 20:31:47 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம் (பொறுப்பு)**

இ.நி.ம.எண்.45/2020
இன்
அ.வ.எண்.240/2010
வரைவு /சீரான உத்தரவு
நாள்.08.08.2023
மா.உ.நீ., பல்லடம் (பொறுப்பு)